பக்கங்கள் 14 + 03

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 19 திங்கட்கிழமை 02.06.2024 | அதிர்வு 303

## செம்மணிப் புதைகுழியில் 5 மனித எலும்புக்கூடுகள்

### இதுவரை அடையாளம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 5 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



- 13 ஆவது திருத்தம் முழுமையான - இறுதியான தீர்வு அல்ல
- தமிழ் மக்களின் விடுதலை கருதி ஓரணியாகச் செயற்படுவோம்

# ‘சைக்கிள்’ - ‘சங்கு’ கொள்கை ஒப்பந்தம்

### யாழ்ப்பாணத்தில் இன்று கைச்சாத்து

(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியப் பேரவைக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான கொள்கை ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டது.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் வைத்து இன்று பிற்பகல் 12.45 மணியளவில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கமும் கையொப்பமிட்டனர்.

02







## ‘சைக்கிள்’ - ‘சங்கு’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், ந.சிறீகாந்தா, பொ. ஐங்கரநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம், ஈ.சரவணபவன், க.அருந்தவபாலன், க.நாவலன் ஆகியோரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம், சுரேஷ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார், நாகலிங்கம் இரட்ணலிங்கம், பா.கஜதீபன், க.சர்வேஸ்வரா உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியப் பேரவை, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய தரப்புக்களிடையே தொடர்ச்சியாக நடைபெற்ற சந்திப்புக்களைத் தொடர்ந்து இன்று இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“சுதந்திர இலங்கைத் தீவில் கடந்த 77 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் தேசம் தனது அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் விதத்திலும் தன்னுடைய தனித்துவம், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தனது மரபுவழித் தாயகத்தில் ஒரு தனியான தேசம் என்ற அடிப்படையில் தனது பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது விவகாரங்களைத்தானே கையாளக்கூடிய விதத்திலும் தனது சுதந்திரத்தை நிலைநிறுத்தும் வகையிலும் பூரண பொறுப்பு வாய்ந்த ஒரு சுயாட்சி அரசியல் ஆட்சி முறையைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையது என்ற யதார்த்தத்தின் அடிப்படையிலும், இந்த இலக்கினை அடைவதற்கு தமிழ்த் தேசத்தினால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்திருக்கும் ஒற்றையாட்சி எனப்படும் அரசியல் ஆட்சி முறையின் எந்தவொரு ஏற்பாட்டின் கீழும் அறவே இடமில்லை என்பதுடன் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்ட அரசு ஒன்றினை, தமிழ்த் தேசத்தின் மரபுவழித் தாயகத்தில், இலங்கைத் தீவு என்ற யாதார்த்த ரீதியான வரையறைக்குள் ஏற்படுத்துவதற்கு, ஒற்றுமையாகவும் உறுதியாகவும் பாடுபட நாம் தீர்மானித்துள்ளோம் என்பதையும் பிரகடனப்படுத்துகின்றோம்.

இலங்கைத்தீவில் இனப்பிரச்சினைக்கு நிலையானதும் நீதியானதுமான அரசியல் தீர்வு என்பது ஒரு புதிய அரசியல் சாசனத்தை திட்டவட்டமானதும் தெளிவானதுமான முறையில் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஏதுவாக, தமிழ்த் தேசத்தின் அரசியல் ஒற்றுமையை தமிழ்த் தேசியச் சக்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி ஏற்படுத்தப்படுகின்றது.

1. தமிழ் மக்களின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழ்த் தேசத்தின் இறைமையின் பாற்பட்டும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மரபுவழித் தாயகத்தில், ஒரு பூரணமான சம்ஷ்டி ஆட்சி முறை, அரசியல் சாசன ரீதியாக ஏற்படுத்தப்படுவதே தமிழ்த் தேசத்தின் இறைமையை ஏற்பதாகவும் தியாகம் செறிந்ததுமான நீண்ட விடுதலைப் போராட்டத்தின் அர்த்தமுள்ள அங்கீகாரமாகவும் இருக்க முடியும் என்பதை நாங்கள் வலியுறுத்தி நிற்கின்றோம். மேலும், தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட எமது முஸ்லிம் சகோதரர்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் நிலைநிறுத்தும் விதத்தில் அரசியல் சாசன ரீதியானவையும், வலுவானவையுமான அரசியல் நிர்வாக ஏற்பாடுகள், முஸ்லிம் சமூகத்தின் சம்மதத்துடனும் இணக்கப்பாட்டுடனும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

2. அரசியல் யாப்புக்கான 13 ஆவது திருத்தம் என்பது தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கான முழுமையானதோ, இறுதியானதோ தீர்வு அல்ல என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

3. கடந்த 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசின் அரசியல் நிர்ணய சபையினால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசன வரைபு என்பது, ஒற்றையாட்சிக்கு உட்பட்டது என்ற காரணத்தால் தமிழ்த் தேசத்தின் சுயாட்சிக்கு இடமளிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் அதனை நாங்கள் ஏற்கனவே நிராகரித்துள்ளோம் என்பதனை இரு தரப்பினரும் வெளிப்படுத்துகின்றோம்.

4. போரின் போதும் அதற்குப் பின்னும் இழைக்கப்பட்ட மற்றும் இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில், உள்ளகப் பொறிமுறைகளை முழுமையாக நிராகரித்துச் சர்வதேசக் குற்றவியல் விசாரணை ஒன்று அவசியமானது என்பதனை இரு தரப்பினரும் வெளிப்படுத்துகின்றோம்.

5. இந்த இலட்சியப் பயணத்தில் தமிழ்த் தேசத்தின் நலனை விரும்பும் சகல தமிழ்த் தேசிய சக்திகளும் நேர்மையாகவும், விரைவாகவும் இணைத்துக் கொள்ளப்படுவதற்குச் சாத்தியமான சகல முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

6. இந்த அடிப்படையில் பிரதிநிதித்துவ ஆட்சி முறை ஒன்றின் கீழ் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும், தமிழ்த் தேசியம் சார்ந்து நேர்மையாக செயற்படும் சக்திகள் ஒன்றிணைந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும், அதே நேரத்தில் இலங்கைக்கு வெளியே வாழ்ந்துகொண்டிருக்கும் புலம்பெயர் ஈழத் தமிழர்கள் மற்றும் பரந்த தமிழர் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரதும் ஒருமித்த ஆதரவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் நாங்கள் விரும்புகின்றோம். இந்த அடிப்படையில் இந்த முயற்சிகளுக்கு எமது மக்கள் அனைவரினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் நாங்கள் நாடி நிற்கின்றோம்.

7. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வலியுறுத்துவதிலும் அரசியல் சாசன ரீதியாக அவற்றை நிலைநாட்டிக் கொள்வதிலும் தமிழ் மக்கள் நேர்மையாகவும் உறுதியாகவும் தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளனர். தமிழ் மக்களின் முழுமையான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக எதிர்காலத்தில் நேர்மையுடனும் கொள்கை உறுதியுடனும் தமிழர் தேசத்தின் அரசியல் செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்காக ஏற்கனவே பல்வேறு தமிழ்த் தேசியக் கட்சிகளும் வெகுசன அமைப்புகளும் ஒருங்கிணைந்து, மக்களின் பங்கேற்புடன் தயாரித்து 2016 ம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொள்ள முடியும் என நாம் கருதுகின்றோம்.

8. இந்தக் குறிக்கோளை ஜனநாயக ரீதியான செயற்பாடுகளாலும், மக்கள் எழுச்சியினாலுமே சாதிக்க முடியும் என்பதை நாங்கள் வலியுறுத்தி, ஒரு பரந்த ஜனநாயக அரசியல் கட்டமைப்பாகவும், இந்த இலக்கினை முன்வைத்து சகல தமிழ்த் தேசியச் சக்திகளையும் ஒன்றிணைத்துச் சாத்தியமான விதத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும், அதை முன்னெடுத்துச் செல்வதற்கும் எமது மக்களின் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

9. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் இரண்டு தரப்பினரும் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் விடுதலை கருதி ஓரணியாகச் செயற்படுவோம் என்பதனையும்வெளிப்படுத்துகின்றோம்.”

– என்றுள்ளது.

# தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய முதியவர் இன்று பிணையில் விடுவிப்பு!

தமிழகத்தில் இருந்து 37 வருடங்களின் பின் தாயகம் திரும்பிய வேளை கைது செய்யப்பட்ட முதியவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

37 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் தமிழகத்துக்கு அகதியாகச் சென்றவர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய வேளை யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் வைத்து கடந்த மே மாதம் 29 ஆம் திகதி குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

யாழ். ஏழாலையைச் சேர்ந்த 75 வயதுடைய சின்னையா சிவலோக நாதன் எனும் 75 வயது முதியவரே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் அவர் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், மேற்படி நபரை இன்று பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# இரத்மலானை - பலாலி விமான சேவை இரு வருடங்களின் பின்னர் வழமைக்கு

(எஸ்.நிதர்ஷன்)

இரண்டு வருடங்களின் பின்னர் இரத்மலானை மற்றும் பலாலி விமான நிலையத்துக்கு இடைடயிலான சேவை இன்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது.

இதனடிப்படையில் இந்தச் சேவையை ஆரம்பிக்கும் முகமான தகுதிகாண் விமான சேவை டேவிட் பீரிஸ் விமான சேவை நிறுவனத்தால் இன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2023 ஆம் ஆண்டுடன் இடைநிறுத்தபட்ட விமான சேவையானது மீண்டும் டேவிட் பீரிஸ் விமான சேவை நிறுவனத்தின் மூலம் இலங்கை விமான சேவைகள் அதிகார சபைக்கு விண்ணப்பிக்கபட்ட விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் முகமாகத் தகுதிகாண் சேவை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த கப்டன் தமிந்த றம்புக்வெல பிரதி தலைமை அதிபதி இலங்கை விமான சேவைகள் அதிகார சபை பின்வருமாறு தனது கருத்தைப் பதிவு செய்தார்.

குறிப்பாக இரண்டு வருடங்களின் பின்னர் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படுகின்றது. நமது நோக்கம் இலங்கைக்கு இடையில் உள்நாட்டு விமான சேவைகளை வளர்ப்பதாகும் .

அதன் அடிப்படையில் டேவிட் பிரிஸ் குடும்பத்தினராக முன்வைக்கப்பட்ட கோரிக்கை அமைவாக இன்று தகுதிதான் சேவை பரிசோதிக்கப்பட்டது.

அனைத்து பரிசோதனை நடவடிக்கைகளிலும் டேவிட் பிரிஸ் விமான சேவைகள் சித்தி பெற்றுள்ளன. இதே வேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சேவைகளை ஆரம்பிப்பதற்கான கட்டுமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பூர்த்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

டேவிட் பிரிஸ் விமான சேவைகள் நிறுவனம் தமது சேவைக்கான விண்ணப்பமாக விளங்குகின்றபோது நாங்கள் அதனை அனுமதிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

இதேவேளை எதிர்காலத்தில் பலாலி விமான நிலையத்தின் ஊடாக எந்தவொரு நாட்டுக்கும் இந்த விமான சபையின் ஊடகப் பயணித்து தாங்கள் விரும்பிய சேவையின் மூலம் பயணிப்பதற்கு இந்தச் சேவை வலியுறுத்தும்." – என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த டேவிட் ஃபீரிஸ் விமான சேவைகள் நிறுவனத்தின் விமானி, "இந்தச் சேவையை வாராந்தம் மூன்று நாள்கள் ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். இரு வழி கட்டணமாக 68 ஆயிரம் ரூபா அறவிடப்படும். ஏழு கிலோ கிராம் பயணிகள் பொதி அனுமதிக்கப்படும். பயண நேரமானது ஒரு வழிக்கு 1 மணித்தியாலம் 10 நிமிடங்கள் தேவைப்படும்." – என்றார்.




# தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவை எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை பிரதான நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன் படுத்திய குற்றச்சாட்டின் பேரில் துசித ஹல்லொலுவ, கடந்த மே மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு!

### ஒருவர் வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கன்னங்குடா கண்ணகியம்மன் ஆலய வீதியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

36 வயதுடைய நபரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீர் விநியோகம் தொடர்பாக இருவருக்கு இடையே நடைபெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதன் காரணமாக வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டுத் துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்த உள்நாட்டுத் துப்பாக்கியும் வவுணதீவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அருட்தந்தையாக திருநிலைப்படுத்தல்

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனையின் புதிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தை கிட்ணன் ருபேசன் அடிகளாரின் முதலாவது திருப்பலி பூஜை கல்முனையில் நடைபெற்றது.

இறையியல் பயிற்சியைப் பூர்த்தி செய்த ருபேசன் கடந்த 22.5.2025 அன்று மன்னார் புனித செபஸ்டியார் பேராலயத்தில் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். அவருடன் மேலும் ஏழு பேர் அருட்தந்தையர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

பின்னர் அவர் தனது முதலாவது நன்றித் திருப்பலியை அருட்தந் தையின் சொந்த பங்கான கல்முனை திரு இருதய நாதர் ஆலயத்தில் நிறைவேற்றினார். இது கல்முனை பங்குத் தந்தை பேதுரு ஜீவராஜ் அடிகளாரின் தலை மையில் இடம்பெற்றது.





## பேலியகொடையில் ஆயுதங்களுடன் ஒருவர் கைது!

கம்பஹா மாவட்டத்தில் பேலியகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொரண சந்தி பிரதேசத்தில் ஆயுதங்களுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பேலியகொடை, வெதமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து 3 வாள்கள், 10 கத்திகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணிப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரியாலை, செம்மணி, சித்துப்பாத்தி மயானத்தில் ஒரு குழியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் இரண்டு எலும்புக் கூடுகள் கண்டுகொள்ளப்பட்டதையடுத்து இன்று அகழ்வுப் பணிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டன. இன்றைய அகழ்வுப் பணியுடன் 5 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதேநேரம் மேலும் பல எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சின்னத்தனமான வேலை!

யாழ். பலாலி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட நபரை விடுவிப்பதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன எனப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள அகதி முகாமிலிருந்து கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பிய வயோதிபரொருவர் பலாலி விமானநிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டமை குறித்தே அவர் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

பலாலி விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இலங்கையில் இருந்து வெளியேறும்போது முறைப்படியான சட்டங்களைப் பின்பற்றியிருக்கவில்லை. அதனைக் காரணம் காண்பித்தே அவர் மீண்டும் நாடு திரும்பும்போது கைது செய்யப்பட்டிருக்கின்றார். இதனைத் தவிர, அவர் கைது செய்யப்படுவதற்கு வேறு காரணங்கள் எதுவுமில்லை என்று அமைச்சர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

‘‘அகதிகளாக சென்றவர்களோ, புலம்பெயர்ந்தவர்களோ மீண்டும் நாடு திரும்பும் போது அவர்களைக் கைது செய்வது எமது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. ஆனால், இலங்கையின் குடிவரவு, குடியகல்வு சட்டங்களில் காணப்படுகின்ற ஏற்பாடுகளால்தான் இவ்வாறு கைது செய்யப்பட வேண்டிய நிலைமைகள் காணப்படுகின்றன. நாட்டில் அசாதாரணச் சூழல் காணப்பட்ட போது அக்காலத்தில் ஏதோவொரு வகையில் வெளியேறியவர்கள் மீண்டும் நாடு திரும்பும்போது நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்காத வகையில் சட்டத்தில் திருத்தத்தைச் செய்ய வேண்டியுள்ளது. அதற்கான அமைச்சரவை பத்திரத்தை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.’’ - என்றும் சமாளிப்புகளை அவர் முன்வைத்திருக்கின்றார்.

‘‘கொள்கையில் மாற்றம் செய்வது வரவேற்கத்தக்கது. சட்டத்தை மாற்ற வேண்டிய தேவையில்லை. அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகரின் ‘சுயமான மீள்வருகை’ திட்டத்தின் கீழ் திரும்புவர்களை கைது செய்யாமல் இன்முகத்தோடு வரவேற்றாலே போதும்!’’ - என்று இதற்குப் பதிலளித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன்.

அகதிகளாக சென்றவர்களோ, புலம்பெயர்ந்தவர்களோ நாட்டுக்கு எதிராக வேறு குற்றம் ஏதும் இழைக்காத நிலையில் மீண்டும் நாடு திரும்பும் போது அவர்களைக் கைது செய்வது இல்லை என்பது இந்த அரசாங்கத்தினுடையது மட்டுமல்ல, இதற்கு முந்திய அரசாங்கங்களினதும் தீர்க்கமான முடிவு என்றுதான் வெளியில் இதுவரை காலமும் பகிரங்கப்படுத்தப்பட்டு வந்தது. காட்டப்பட்டு வந்தது.

அப்படி இருந்தும், நாட்டு நடப்புகள் எதுவுமே தெரியாதவர்கள் போல, சட்டத்தை மாத்திரம் நடைமுறைப்படுத்தும் ‘நல்ல அதிகாரிகள்’ என்ற நாடகத்தைப் பலாலியில் உள்ள குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் முன்னெடுத்திருக்கின்றனர். அதன் பின்னர் 24 மணிநேரம் கழித்து, அந்த வயோதிபரை விளக்கமறியலில் வைக்கும் செயற்பாடு சட்ட நடவடிக்கை என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாடு தெரியவேயில்லை என்பது - அதுவும் இதுபோல பல்லாயிரம் அகதிகளை விமான நிலையங்கள் ஊடாக நாட்டுக்கு மீள திரும்ப அனுமதித்த அதிகாரிகளுக்கு தெரியவில்லை என்பது - நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் பாணியில் கூறுவது என்றால் ‘சின்னத்தனமான வேலை’! அவ்வளவுதான்.




# கிழக்கு வேலையில்லாப் பட்டதாரிகள் ஆளுநர் அலுவலகம் முன் கவனவீர்ப்பு

**(ஏ.எச். ஹஸ்பர்)**

கிழக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் இன்று (02) திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போட்டி பரீட்சையின்றி நியமனம் வழங்கக் கோரியும், கிழக்கு மாகாண பட்டதாரிகள் அரச நியமனங்களில் புறக்கணிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன் போது பேச்சுவார்த்தை போதும் தொழிலை தா?,அரச சேவையில் கிழக்கு மாகாணத்தை புறக்கணிப்பது ஏன், பரீட்சை வேண்டாம் தகுதிகான் அடிப்படையில் வேலை வழங்கு போன்ற பல பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் கீழ் கடல் பகுதிகளில் சுத்தப்படுத்தல்!





**(எஸ்.கீதபொன்கலன்)**

‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் கீழ் இன்று (2) நிலாவெளி கடற்கரை மற்றும் புறாமலைத்தீவு அதனை சூழவுள்ள கடற்படுக்கை என்பன சுத்தம் செய்யப்பட்டன.

தேசிய ‘கிளீன் ஸ்ரீலங்கா’ செயலகம், கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம், திருகோணமலை மாவட்ட செயலகம், குச்சவெளி பிரதேச செயலகம் என்பன இணைந்து இந்தச் சுத்தம் செய்யும் செயற்பாட்டை இன்று காலை முதல் மேற்கொண்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாகாண ஆளுநர், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் பங்கெடுத்தனர். பெருந்தொகையான பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பொதுவான கழிவுகள், கடற்படுக்கையில் காணப்பட்ட பல்வேறு வகையான கழிவுகள் என்பன சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

# யாழ். நகரத்தின் வளர்ச்சி வரலாறு நூல் வெளியீட்டு விழா புதனன்று!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை நடத்தும் விக்கிப்பீடியா மயூரநாதனின் எழுத்தில் யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு (1621 – 1948) என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற வுள்ளது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவ சுப்பிரமணியம் ரகுராமின் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்பு விருந்தினராகத் துணை வேந்தர் பேரா சிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நூலின் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறைத்




தலைவர் , சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் தாமோதரன்பிள்ளை சனார்த்தனன், படைப்பாளியும் அரசியல் விமர்சகரு மான மஹாதேவா நிலாந்தன் ஆகி யோர் ஆற்றவுள்ளனர்.

நூலாசிரியரான கட்டடக் கலைஞர் இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதனின் ஏற்புரையோடு நிகழ்வு நிறைவு பெறும்.

நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை கேட் டுள்ளது.




# வீட்டின் கூரையை உடைத்துக்கொண்டு கர்ப்பிணியின் வயிற்றில் வீழ்ந்த பலாப்பழம்

கேகாலையில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த கர்ப்பிணி பெண் ஒருவரின் வயிற்றில் பலாப்பழம் விழுந்ததில் கருவிலுள்ள சிசு உயிரிழந்துள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இரவு தெரணியகல, லிஹினியகல பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இந்தத் துயர சம்பவம் பதிவாகியுள்ளது.

33 வயதுடைய 5 மாத கர்ப்பிணிப் பெண் ஒருவரே இந்தத் துயரச் சம்பவத்துக்கு முகம்கொடுத்துள்ளார்.

வீட்டுக்கு அருகில் இருந்த பலா மரத்திலிருந்து பலாப்பழம் ஒன்று வீட்டின் கூரையை உடைத்து வந்து தாயின் வயிற்றில் விழுந்துள்ளது.

வேதனை மிகுதியால் துடித்த தாயார் உடனடியாக தெரணியகல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் வயிற்றில் இருந்த சிசுவின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. தாய் மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அனலைதீவு ஐயனார் கோவிலில் திருடப்பட்ட பித்தளைக் கலசங்களை மீட்டனர் பொலிஸார்!

அனலைதீவு ஐயனார் கோவிலில் திருடப்பட்ட பித்தளை கலசங்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அனலைதீவு ஐயனார் ஆலயத்தின் 06 பித்தளை கலசங்கள் காணாமல் போயிருந்தன.

இது குறித்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அந்தவகையில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விதான பத்திரனவின் தலைமையிலான குழுவினர் நேற்று (01) சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். அத்துடன் 06 கலசங்களையும் மீட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரம்புக்கனை - கப்பல பிரதேசத்தில் ஆயுதத்தால் தாக்கி பெண் கொலை!

ரம்புக்கனை – கப்பல பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் வைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணுக்கு திருமணத்துக்குப் புறம்பான உறவு இருந்தாகவும், இதனால் அவரது கணவன் இவ்வாறு கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார் என்றும் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. தாக்குதலை மேற்கொண்ட நபர் அந்தப் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சம்பவத்தில் உயிரிழந்த பெண் 46 வயதுடைய கொஸ்கஹகும்புர பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ரம்புக்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# முப்படைகளில் இருந்து தப்பிய பல பேர் கைது செய்யப்பட்டனர்!

முப்படைகளில் இருந்து தப்பியோடிய பல பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். அதிகாரிகள் உட்பட 2 ஆயிரத்து 983 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



பெப்ரவரி 22 முதல் மே 30 வரை நடத்தப்பட்ட நடவடிக்கைகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட வீரர்களில் 2 ஆயிரத்து 261 இராணுவத்தினரும், 194 கடற்படையினரும், 198 பேர் விமா னப்படையினரும் அடங்குவர்.

இவர்களுடன் தப்பியோடிய 330 அதிகாரிகளையும் இலங்கை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று பாது காப்பு அமைச்சகம் மேலும் குறிப் பிட்டுள்ளது.





# கிளிநொச்சி ஆஸ்பத்திரி கிணற்றில் மலத்தொற்று இருப்பது உறுதியானது!

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை கிணற்று நீரில் மலத்தொற்று இருப்பது ஆய்வில் கண்டயறிப்பட்டுள்ளது. தற்போது தொற்று நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைத்தியசாலை வளாகத்தில் உள்ள கிணற்று நீர் வைத்தியசாலையின் அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கிணற்று நீர், வைத்தியசாலைக்குள் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் சுத்திகரிக்கப்பட்டு குடிதண்ணீராகவும் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நீரில் ஒரு சில நாள்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் மலத்தொற்று (ஈகோலி) இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மலத் தொற்று நீக்கியாகக் குளோரின் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வைத்தியசாலையில் கிணற்றில் காணப்படும் மலத்தொற்று கிருமிகளை நீக்கம் செய்ய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை நகரையும் நகரை அண்டிய பிரதேசங்களிலும் பெரும்பாலான கிணறுகளில் மலத்தொற்று காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்டத்தின் நகரையும் நகரை அண்டிய பகுதிகளின் பொது கிணறுகள் உள்ளிட்ட சில கிணறுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி பல கிணறுகளில் மலத்தொற்று இருப்பது கண்டறியப்பட்டிருந்தது.

எனவே பொது மக்கள் கிணற்று நீரை குடிப்பதற்கு பயன்படுத்துகின்ற போது நன்கு கொதிக்க வைத்து பயன்படுத்த வேண்டும். கிணற்றில் குளோரின் இட்டு தொற்று நீக்க வேண்டும் என சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.



## புறக்கோட்டை மிதக்கும் சந்தைப் பகுதியில்

# நபர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டு ஆறு இராணுவச் சிப்பாய்கள் கைது!

கொழும்பு, புறக்கோட்டை மிதக்கும் சந்தைப் பகுதிக்கு அருகில் மதுபோதையில் நபரொருவரை தாக்கி காயப்படுத்தினர் என்று கூறப்படும் ஆறு இராணுவச் சிப்பாய்கள் புறக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதானை இராணுவ முகாமில் கடமையாற்றும் 29 முதல் 40 வயதுக்கு உட்பட்ட ஆறு இராணுவ சிப்பாய்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவரே தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புறக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் பரிசோதனைகள்

(பழுவூரான்)

மத்திய சிற்றாடல் அதிகார சபையால், தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் (02) பல்வேறு விழிப்புணர்வு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பதில் பணிப்பாளர் நா. சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு சுற்றாடல் பாதுகாப்பு பிரிவின் பொலிஸார் மற்றும் மாவட்ட சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகள் நகரின் பிரதான சந்தையில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக், பொலித்தின் விற்பனை செய்யும் வியாபார நிலையங்களில் விசேட பரிசோதனை செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

இதன் போது வியாபார அனுமதி பத்திரம் பொலித்தீனில் பொதி செய்யப்பட்ட உணவுப் பொதிகள், பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட உபகரணங்களை விற்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் வியாபாரிகளுக்கு விசேட விளக்கங்கள் வழங்கி வைக்கப்பட்டன.









# அம்பாறை மாவட்ட எம்.பிகளுடன் கிழக்கு உயர் அதிகாரிகள் சந்திப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிழக்கு மாகாண சபையின் இவ்வாண்டுக்கான பிஎஸ்ஜிஎஸ் நிதி ஒதுக்கீட்டை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆளுநரின் செயலகத்தில் நடைபெற்றது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர், கிழக்கு மாகாண கல்வி, சுகாதார, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண சபையின் செயலாளர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உக்ரைனிய ஸ்பைடர் வெப் தாக்குதல்; ரஷ்யாவின் ‘பேர்ல் ஹார்பர்’ அழிவா ?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

போர் முனைகளில் இருந்து பல ஆயிரக் கணக்கான கிலோ மீற்றர்கள் தூரத்துக்கு அப்பால் ரஷ்யாவின் ஆர்ட்டிக் மற்றும் தூர கிழக்கு சைபீரியாப் பகுதிகளில் அமைந்திருந்த முக்கிய விமானத் தளங்களின் மீதே மிகப் பெருமெடுப்பிலான ட்ரோன் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

**ரஷ்யாவின் பேர்ல் ஹார்பர்**

ரஷ்ய விமானத் தளங்கள் மீதான தாக்குதலை அமெரிக்க நாட்டின் பேர்ல் ஹார்பர் (Pearl u;arbour ) தாக்குதலுக்கு ஒப்பானது என இராணுவ வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

உக்ரைனின் ஆச்சரியமான பேரழிவை ரஷ்யாவுக்குத் தந்த தாக்குதலாகும். ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் எந்தப் போர் இல்லாதபோது பேர்ல் ஹார்பர் மீதான தாக்குதல் நடந்தமை குறிப்பிடத்தக்கது.

கிரெம்ளின் தொடர்ந்து உக்ரைனின் நகரங்கள் மீது பாரிய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வரும் நிலையில், உக்ரைனிய தாக்குதல் மாஸ்கோவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

உக்ரைனிய தரப்பு அறிக்கைகளின்படி, நாற்பது விமானங்கள் தாக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையைத் திட்டமிட்டு செயல்படுத்திய உக்ரைனின் பாதுகாப்பு சேவை - இந்தத் தாக்குதல் ரஷ்யாவின் க்ரூஸ் ஏவுகணைகளை ஏந்திச் செல்லும் திறன் கொண்ட 34 சதவீத மூலோபாய குண்டுவீச்சு விமானங்களை அழித்ததாகக் கூறுகிறது.

**“ஒப்பரேஷன் ஸ்பைடர் வெப்”**

உக்ரைனில் இருந்து பல ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் தொலைவில் சைபீரியாவில் அமைந்துள்ள பெலாயா (Belaya), தூர வட கிழக்கில் அமைந்துள்ள ஒலெனியா (Olenia), மற்றும் டியாகிலெவோ (Dyagilevo), இவானோவோ (Ivanovo) ஆகிய விமானத் தளங்களே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

நீண்ட காலமாக திட்டமிடப்பட்டுவந்த இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள ட்ரோன் விமானங்கள் கப்பல் சரக்குக் கொள்கலன்களைச் சுமந்து செல்கின்ற ட்ரக் வாகனங்கள் மூலமே வான் தளங்களை அண்டிய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்ற தகவலை உக்ரைன் பாதுகாப்புச்சேவை வட்டாரங்கள் வெளியிட்டிருக்கின்றன.

வெடிகுண்டு தாங்கிய ட்ரோன்கள் ட்ரக் கொள்கலன்களின் கூரைப் பகுதிகளுக்குள் மரத்தால் வடிவமைக்கப்பட்ட மறைவிடங்களுக்குள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளன. மரத்தினாலான பகுதிகள் ரிமோர்ட் கொன்ட்ரோல் முறையில் திறக்கப்பட்டதும் அவை அங்கிருந்து மெலெழுந்து பறந்து சென்று ரஷ்ய வான் தளங்களைத் தாக்கும் விதமாகத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்துவது போன்று ட்ரக் வாகனம் ஒன்றின் மேற்பகுதியில் இருந்து ட்ரோன்கள் கிளம்பிப் பறக்கின்ற வீடியோக் காட்சிகளும் வெளியாகியுள்ளன. சைபீரியா வரை ஆழ ஊடுருவி நடத்தப்பட்ட இத் தாக்குதல் நடவடிக்கைக்கு “ஒப்பரேஷன் ஸ்பைடர் வெப்” ( Operation Spiders Web) என்று பெயரிடப்பட்டுள்ளது.

**ரஷ்ய 40 போர் விமானங்கள் அழிப்பு!**

ரஷ்யாவின் ஐந்து விமானப்படை தளங்கள் மீது உக்ரைன் ராணுவம் ட்ரோன்கள் மூலம் மிகப்பெரிய தாக்குதலை நடத்தியுள்ளது என்று ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்ட ரஷ்யப் போர் விமானங்கள் அழிக்கப் பட்டுள்ளன என்றும் ரஷ்யாவுக்குப் பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

ஜூன் முதலாம் திகதி ஞாயிறு நடத்தப்பட்ட உக்ரைனின் பெருந் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ள ரஷ்ய அரசு, எதிர்காலத்தில் எத்தகைய பதில் தாக்குதலை நடத்தலாம் என்பதுதான் தெரியவில்லை.



ரஷ்யாவுக்குள் மிகத் தொலை தூரத்தில் அமைந்துள்ள வான் தளங்கள் மீது உக்ரைன் நடத்தியுள்ள தொடரான பெரும் ட்ரோன் தாக்குதல்களில் ரஷ்ய விமானப்படை பேரழிவைச் சந்தித்திருக்கிறது. நாற்பதுக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று உக்ரைனியப் பாதுகாப்புச் சேவை அறிவித்திருக்கிறது.

அணு ஆயுதங்களைச் சுமந்து கொண்டு நீண்ட தூரம் பறக்கவல்ல பல சண்டை விமானங்களும் அவற்றில் அடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யா சந்தித்துள்ள இந்த இழப்பு எண்ணிக்கையைச் சுயாதீனமான வட்டாரங்கள் இன்னமும் உறுதிப்படுத்த வில்லை. எனினும் விமானங்கள் பல எரிந்து வெடித்துச் சிதறுகின்ற காட்சிகள் அடங்கிய வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவின் உள்ளே மிகத் தொலைதூரத்தில் வான் தளங்கள் சில தாக்குதலுக்கு இலக்காகியிருப்பதை ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. ஆயினும் சில விமானங்களில் மட்டுமே தீப்பற்றியதாகவும் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் நேரவில்லை எனவும் அது தெரிவித்திருக்கிறது.

தாக்குதலுக்கு உள்ளான ரஷ்ய போர் விமானங்களில் அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ரியூ-95, ரியூ-22, எம் - 3 மற்றும் ஏ-50 போர் விமானங்களும் அடங்கும் என உக்ரேனிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**அமைதிப் பேச்சு முறியுமா ?**

இதேவேளை இன்று (02) துருக்கியின் இஸ்தான்புலில் இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுகள் நடத்த ரஷ்ய - யுக்ரேன் அதிகாரிகள் செல்லும் நிலையில்தான் இந்த தாக்குதல்கள் அனைத்துமே நடந்துள்ளன.

இரண்டு நாடுகளுக்கும் இடையே இந்தப் போரை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது என்பதில் ஒருமித்த கருத்து ஏற்படாமல் இருப்பதால் பேச்சு மீது குறைவான எதிர்பார்ப்புகளே உள்ளன.

2022 பெப்ரவரியில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உக்ரேன் மீது முழு அளவிலான போரைத் தொடங்கினார். 2014இல் ரஷ்யா ஆக்கிரமித்த உக்ரேனிய பகுதியான கிரைமியா உடன் சேர்த்து தற்போது 20 வீதம் உக்ரேன் நிலப்பரப்பு ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

தற்போது இந்த தாக்குதலின் பின்னர் ரஷ்யாவின் பதிலடி எப்படி இருக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். உக்ரேன் மார்தட்டுவது போல ரஷ்யா பாரிய இழப்பை சந்தித்து இருந்தால், மாஸ்கோவின் பதிலடி அகோரமாகவே இருக்கும் என்பதை ஊகிக்கலாம்.

இந்த வான் தாக்குதல் ஆபரேஷனுக்கான தங்களுடைய அலுவலகம் ரஷ்யாவின் பிராந்தியங்கள் ஒன்றில் அதன் எஃப்.எஸ்.பிக்கு (FSB) அடுத்தே இருந்தது என்று ஜெலென்ஸ்கி தெரிவித்து உள்ளார். எஃப்.எஸ்.பி என்பது ரஷ்யாவின் சக்தி வாய்ந்த பாதுகாப்பு அமைப்பு ஆகும்.

அத்துடன் இந்தத் தாக்குதல்களில் சம்மந்தப்பட்ட நபர்கள் அதற்கு முன்பே பாதுகாப்பாக ரஷ்யாவில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்றும் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.





# மன்னிப்பு கேட்காவிட்டால் கமல்ஹாசனின் படங்களை திரையிட அனுமதிக்க மாட்டோம்

## கர்நாடக அமைச்சர் எச்சரிக்கை

நடிகர் கமல்ஹாசன் மன்னிப்பு கேட்காவிட்டால் அவரது படங்களை திரையிட அனுமதிக்க மாட்டோம் என்று கர்நாடக அமைச்சர் சிவராஜ் தங்கடகி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் அண்மையில் நடைபெற்ற 'தக் லைஃப்' திரைப்பட நிகழ்வில் நடிகரும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹா சன் பேசுகையில், "தமிழில் இருந்து பிறந்தது தான் கன்னடம்" என குறிப்பிட்டார்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள கன்னட அமைப்பினர், அவருக்கு எதிராக பெங்களூர் பொலிஸில் புகார் அளித்தனர். கர்நாடக முதல்வர் சித்தராமையா, பா.ஜ.க. மாநில தலைவர் விஜயேந்திரா உள்ளிட்டோரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில் கன்னட கலை மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் சிவராஜ் தங்கடகி கூறும்போது,

"கமல்ஹாசனின் கருத்தால் கன்னட மக்களின் மனம் புண்பட்டுள்ளது. கன்னட மொழிக்கு எதிரான சிறு கருத்தையும் எங்களால் ஏற்க முடியாது. கமல்ஹாசன் கட்டாயம் மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிடில் அவர் நடித்த அனைத்து திரைப்படங்களையும் கர்நாடகாவில் திரையிட அனுமதிக்க மாட்டோம்." என்றார்.

கர்நாடக திரைப்பட வர்த்தக சபை தலைவர் நரசிம்மலு கூறும்போது, "கமல்ஹாசன் கன்னட மக்களிடம் மன்னிப்பு கேட்காவிடில் அவரது படங்களுக்கு கர்நாடகாவில் தடை விதிக்கப்படும்." என்றார்.

# சட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணி குறித்த தே.மு.தி.கவின் நிலைப்பாடு ஜனவரியில்

## பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவிப்பு

சட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணி குறித்த எங்கள் நிலைப்பாட்டை ஜனவரியில் அறிவிப்போம் என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

இதுகுறித்து தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தி.மு.க. பொதுக்குழுவில் எங்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மறைந்த விஜயகாந்துக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு தி.மு.கவுக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

தே.மு.தி.கவுக்கு 2026 இல் மாநிலங்களவை இடம் கொடுக்கப்படும் என அ.தி.மு.க. தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மக்களவைத் தேர்தலின் போதே அ.தி.மு.க. கூட்டணியில் 5 இடங்கள் மற்றும் ஒரு மாநிலங்களவை இடம் என்பது உறுதி செய்யப்பட்டது.

இதில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி மற்றும் முத்த நிர்வாகிகள் வாய்மொழியாக மட்டுமின்றி எழுத்துப்பூர்வமாகவும் உறுதி அளித்தனர். அதை அறிவிக்க வேண்டிய இடத்தில் அ.தி.மு.க. இருப்பதால் தான் நாங்கள் அமைதியாக இருந்தோம். ஏனெனில், 2024 மக்களவைத் தேர்தலின் போதே எழுதி தரப்பட்ட ஒப்பந்தத்தில் வருடம் இல்லை. அது தொடர்பாக கேட்டதற்கு வழக்கமாக வருடம் குறிப்பிடமாட்டோம். ஆனால், உறுதியாக ஓரிடம் தருகிறோம் என்றனர்.



ஏற்கெனவே அன்புமணி, ஜி.கே. வாசனுக்கு அ.தி.மு.க. தரப்பில் மாநிலங்களவை இடம் தரப்பட்டுள்ளது. அதேபோல், இந்த முறை தே.மு.தி.கவுக்கு என்று உறுதி செய்துள்ளனர். அரசியல் என்பது தேர்தலை ஒட்டியது தான். 2026 தேர்தலை ஒட்டிதான் மாநிலங்களவை இடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் கடமையை ஆற்றியுள்ளனர். தேர்தலை ஒட்டியே எங்களின் கடமையை செய்வோம். ஜனவரி 9 ஆம் திகதி கடலூரில் நடைபெறும் தே.மு.தி.க. மாநாட்டில் கூட்டணி குறித்த நிலைபாட்டை முடிவு செய்வோம். அடுத்த 6 மாதம் தேர்தலை நோக்கி எங்கள் பயணம் இருக்கும்." என்றார்.

இந்த சந்திப்பின்போது தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே. சுதீஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர். இதற்கிடையே அ.தி.மு.க. ஆசனம் வழங்காததால் தே.மு.தி.க. அதிருப்தியில் இருப்பதாகவும், அதனால்தான் அந்த கூட்டணியில் இருப்பதை பிரேமலதா உறுதி செய்யயவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மனிதநேயத்திற்கு எதிரான குற்றத்தில் ஈடுபட்டாரென ஷேக் ஹசீனா மீது பங்களாதேஷ் அரசு குற்றச்சாட்டு

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மனிதநேயத்திற்கு எதிரான குற்றத்தில் ஈடுபட்டார் என அந்நாட்டின் தற்போதைய அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மாணவர்கள் போராட்டத்தின் போது அதனை ஒடுக்கும் வகையில் ஷேக் ஹசீனா செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு பங்களா தேஷில், மாணவர்கள் போராட்டம் காரணமாகப் பிரதமராக அப்போது பதவி வகித்த ஷேக் ஹசீனா பதவியில் இருந்து விலகி இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.



அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி உள்ள பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கம், ஷேக் ஹசீனாவை நாடு கடத்தும்படி இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே ஷேக் ஹசீனாவுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு உள்ளன.

அவருக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாணவர் போராட்டத்தின் போது, அதனை ஒடுக்க வேண் ՀԴம் என்பதற்காக ஷேக் ஹசீனா மற்றும் இரண்டு உயர் அதிகாரிகள் மனித நேயத்திற்கு எதிரான குற்றத்தில் ஈடுபட்டனர் என பங்களாதேஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.





# பிரித்தானியாவுக்குள் நுழைந்த ஆயிரக்கணக்கான குடியேறிகள்

ஆங்கிலக்கால்வாயை கடந்து பிரித்ததானியாவுக்குள் நுழையும் குடியேறிகளின் பிரச்சனை பிரித்தானிய அரசாங்கத்துக்கு பெரும் தலையிடியாக உள்ள நிலையில், நேற்று ஒரே நாளில் பல சிறிய படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பிரித்தானியாவுக்குள் நுழைந்துள்ளனர்.

இது இந்த வருடத்தில் ஒரே நாளில் ஆங்கிலகால்வாயை சட்ட விரோதமாக கடந்த குடியேறிகளின் அதிக அளவாகும்.

நேற்று அதிகாலை முதல் கால நிலை நன்றாக இருந்தால் இந்த சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திய சட்ட விரோதக்குடியேறிகள் பிரான்ஸ் கடற்கரைகளில் இருந்து அதிகளவில் பிரித்தானியாவை நோக்கி பயணித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கா குடியேறிகள் ஆங்கிலக்கால்வாயை கடக்கும் வகையில் பல படகுகளில் ஏறிய போது அந்த வெளியேற்றத்தை தடுக்க முடியாமல் பிரான்ஸ் பொலி ஸார் வேடிக்கை பார்க்கின்றனர் என பிரித்தானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஒரேநாளில் அதிகளவில் குடியேறிகள் ஆங்கிலக்கால்வாயை கடந்ததால் அவர்களை பாதுகாப்பாக மீட்க முடியாமல் திணறிய பிரித்தானிய எல்லைகாவல் படகுகள் இந்த மீட்பு முயற்சிக்கு மீன்பிடிப்படகுகளின் உதவியையும் நாடியிருந்தன.

தரையிறங்கியவர்களின் ஒரு பகுதியினர் டோவர் துறைமுகத்தில் உள்ள புலம்பெயர்ந்தோர் செயலாக்க மையத்தால் கையாளப்பட்டனர் எனவும் டோவர் மற்றும் அருகில் உள்ள கடற்கரைகளில் நேற்று மட்டும் மொத்தமாக ஆயிரத்து இருநூறு குடியேறிகள் நுழைந்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரேநாளில் இவ்வாறு அதிகளவு குடியேறிகள் நுழைந்ததை தடுக்க முடியாத தொழிற்கட்சி அரசாங்கம் பிரித்தானியாவின் எல்லைக்கட்டுப்பாட்டை இழந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.



கனடா முரசு

பக்கம் 03

திங்கட்கிழமை 02/06/2025

## தபால் ஊழியர்கள் போராட்டம்

கனடாவில் தபால் திணைக் களத்தில் பணியாற்றி வரும் ஊழியர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டின் 13 நகரங்களில் இந்த போராட்டம் 02



# கனடாவில் தொடரும் காட்டுத்தீப்பரவல் 3 மாகாணங்களில் மக்கள் வெளியேற்றம்

**கனடாவில் ஏற்பட்ட காட்டுத்தீப்பரவலினால் சில மாகாணங்களில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக 3 மாகாணங்களிலுள்ள மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.**

**கனடா மற்றும் அமெரிக்காவின் சில பகுதிகளில் நேற்றையதினம் ஏற்பட்ட காட்டுத்தீப்பரவல் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால், மூன்று மாகாணங்களில் உள்ள 25,000 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**

அவசரநிலை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கனடாவின் மானிடோபாவைச் சேர்ந்த சுமார் 17,000 பேர் வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை, ஆல்பர்ட்டாவில் 1,300 பேரும் சஸ்காட்செவனில் சுமார் 8,000 பேரும் வெளியேற்றப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.














# கனடாவில் வாடகை சட்டங்களை அமுல்படுத்துமாறு கோரி போராட்டம்

கனடாவின் மொன்ரியலில் வாடகை கட்டுப்பாட்டு சட்டங்களை அமுல்படுத்துமாறு கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

க்யூபெக் அரசாங்கத்திடம் வாடகை கட்டுப்பாட்டு சட்டங்களை அமல்படுத்தக் கோரி நூற்றுக்கணக்கானோர் மழையை பொருட்படுத்தாமல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீட்டு உரிமையாளர்கள் நியாயமற்ற வகையில் செயற்பட்டு வருவதாக வாடகைக் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வரையறைகள் இன்றி வாடகைத் தொகை உயர்த்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

வீட்டு சந்தைகளை கருத்திற்கொள்ளாது மனிதாபிமான அடிப்படையில் வாடகைத் தொகைக் குறைக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளனர்.

வசதிகள் மற்றும் வீட்டு வாடகை பற்றிய புதுமுறை கணக்கீட்டுக் கோட்பாட்டை கடந்த மாதம் க்யூபெக் வீட்டு உள்கட்டமைப்பு அமைச்சர் பிரான்ஸ்-எலேன் டூரன்சோவ் அறிவித்திருந்தார்.

இந்த நடைமுறை, நுகர்வோர் விலை குறியீட்டு அளவீட்டை மூன்று ஆண்டுகளின் சராசரியாக கொண்டு, வாடகை உயர்வில் நிலைத் ணதன்மையை வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.




## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டுள்ளது. தபால் திணைக்களத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமை தொடர்பில் இந்த போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சில கோரிக்கைகளின் அடிப்படையில் தபால் தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

கனடாவில் சுமார் 55 ஆயிரம் பணியாளர்கள் தபால் தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கின்றனர். ஆரம்பகட்ட பேச்சு வார்த்தைகள் தோல்வி அடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே தபால் ஊழியர்கள் போராட்டங்கள் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த நத்தார் பண்டிகை காலத்தில் இந்த போராட்டம் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது.

மீண்டும் தற்பொழுது கனடிய தபால் திணைக்களப் பணியாளர்கள் போராட்டத்தில் குதிக்கும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை குறித்து கனடிய தபால் திணைக்களம் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

தமது உரிமைகள் மறுக்கப்படுவதன் காரணமாக போராட்டத்தில் ஈடுபட நேரிடுவதாக தபால் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.






# கனடாவில் கொவிட் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## மருத்துவ அதிகாரிகள் அறிவிப்பு



கனடாவில் கொவிட் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு நாடுகளில் புதிய கொவிட் திரிபு தொடர்பிலான தகவல்கள் வெளியாகி உள்ளன.

குறிப்பாக ஒமிக்கிறோன் திரிபின் உப திரிபுகள் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கனடிய மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள் ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவிப்பின் பிரகாரம் என்.பி.1.8.1 என்ற திரிபு பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய வகை திரிபு பரவுகை தொடர்பில் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் நோய்த்தொற்று பரவுகை தீவிர அளவில் கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இந்த நோய் தொற்று அமெரிக்காவிலும் ஏனைய பல நாடுகளிலும் பரவி உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அதிஷ்ட இலாப சீட்டிழுப்பில் 30 கோடி ரூபா வென்ற காதலனின் பணத்தை அபகரித்து தப்பியோடிய காதலி

கனடாவில் காதலனுக்கு அதிஷ்ட இலாப சீட்டிழுப்பில் விழுந்த 30 கோடி ரூபாவை சுருட்டிக்கொண்டு வேறொருவருடன் கம்பி நீட்டியுள்ளார் காதலி.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கனடாவின் வின்னிபெக்கைச் சேர்ந்த லோரன்ஸ் கேம்பல் என்ற நபர் வாங்கிய அதிஷ்ட இலாப சீட்டில் 5 மில்லியன் கனடிய டொலர்களை (சுமார் 30 கோடி இலங்கை ரூபா) வென்றார்.

அவருக்கு வங்கிக் கணக்கு கூட இல்லாததால், மேற்கு கனடா அதிஷ் இலாப சீட்டிழுப்பு அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில், பணத்தை தனது காதலி மெக்கேயின் பெயரில் வைப்பு செய்ய ஒப்புக்கொண்டார்.

இருவரும் ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக உறவில் இருந்ததாகவும், அவர்கள் ஒன்றாக வாழ்கிறார்கள் என்ற நம்பிக்கையிலேயே இந்த முடிவை எடுத்ததாகவும் கேம்பல் கூறினார்.

ஊடகங்கள், லோரன்ஸ் அந்த வெற்றியை தனது காதலிக்கு சமர்பித்ததாக புளகாங்கிதத்துடன் செய்திகளை வெளியிட்டன. அதனபின்னும் இருவரும் பொது இடங்களில் ஒன்றாகவே காணப்பட்டனர்.

இந்நிலையில் அதிஷ்ட இலாப சீட்டிழுப்பை வென்ற சில நாள்களுக்குப் பிறகு, மெக்கே காணாமல் போயுள்ளார். அவர் எல்லா தொடர்புகளையும் துண்டித்துவிட்டார் என்றும் கேம்பல் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில் அதிஷ்ட இலாப சீட்டிழுப்பை வென்ற சில நாள்களுக்குப் பிறகு, மெக்கே காணாமல் போனார் எனவும் எல்லா தொடர்புகளையும் துண்டித்துவிட்டார் என்றும் கேம்பல் குற்றம் சாட்டியுள்ளார். கடைசியாக அவளை வேறொரு ஆணுடன் பார்த்தேன் என்றும் அவர் தெரிவித்தார்.

வேறொருவரின் பெயரில் அதிஷ்ட இலாப உரிமை கோருவது குறித்து தனக்கு தவறான ஆலோசனை வழங்கியதாகக் கூறி, அதிஷ்ட இலாப நிறுவனம் மீதும் கேம்பல் வழக்குத் தொடர்ந்துள்ளார்.